டிசம்பர் - 18

**"கர்த்தர் எனக்குச் சாகாயர்; நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்."**

**- எபி 13.6.**

ஜீவியத்தில் சரியான மார்க்கத்தை உடையவர்களாய் இருப்பதற்கும், ஜீவியத்தின் சோதனைகளும், கஷ்டங்களும் நமக்கு ஏற்படும்போது அவைகளை சந்திக்கக் கூடியவர்களாயிருப்பதற்கும் உபத்திரவத்தில் சந்தோஷமாயிருக்கிற ஆவியிலும் இப்படிப்பட்ட அனுபவங்களை எல்லாம் சந்தோஷமாக எண்ணுவதுமாகிய, கர்த்தர் நடத்துகிற சரியான ஆவியினாலே அவைகளைச் சந்திப்பதற்கும், கண்ணியை உண்டு பண்ணுகிற எல்லா மனுஷ பயத்தையும் நீக்கிப்போடுவது அவசியமாயிருக்கிறது. நாம் தேவனுக்குப் பயப்பட வேண்டுமென்பதும், ஆனால், நம்முடைய சாவுக்கேதுவான கூட்டாளிகளுக்கு பயப்படக்கூடாது என்பதுமே தேவனுடைய வழிகாட்டுதலாயிருக்கிறது. நீதிமான்கள் சிங்கத்தைப்போல தைரியமாகவும், புறாவைப்போல சாதுவாகவும், ஆட்டுக்குட்டியைப்போல சாந்தமாகவும் இருக்கிறார்கள். இந்தச் சிறப்பான இணைப்பு ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் காணப்பட வேண்டும். இது வேறு எங்கேயாவது **காண்டுபடுமோ என்று நாம் சந்தேகப்படுகிறோம்.**

**- Z "02, 45 (R 2951).**

விசுவாசிகளின் ஓட்டத்துக்கு எதிராக ஏற்படுகிற மனிதரின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் கர்த்தரிலிடத்திலிருந்து நமக்குக் கிடைக்கிற உறுதிமொழிகளில் மிகவும் மதிப்புள்ள ஒன்றை இவ்வாக்கியம் உடையதாயிருக்கிறது. மிஞ்சினால் மனிதர் சரீரத்தை மாத்திரம் கொல்லக்கூடும். அவர்களால் புது இருதயத்தையும், மனதையும் சித்தத்தையும் அழிக்க முடியாது. இது உயிர்தெழுதலில் எழுப்பப்பட்டு வெளிப்படும். மேலும், நமக்கு ஏற்படுகிற அவர்களுடைய எதிர்ப்புக்கு கர்த்தர் எல்லையைக் குறித்திருக்கிறார். ஏனென்றால், "இம்மட்டும் வா, மிஞ்சி வராதே" என்ற இந்த வார்த்தைகள் அவைகளுக்கு உபயோகிக்கப்படுகின்றன. நாம் சரியானபடி அப்பியாசிக்கப்பட்டால், அவைகள் நம்முடைய புது இருதயத்துக்கும், மனதிற்கும், சித்தத்துக்கும் நன்மை செய்வதைத் தவிர வேறு எதையும் கர்த்தர் அனுமதிக்கிறதில்லை. இந்த எதிர்ப்பை சபையிலோ, நாட்டிலோ, மூலதனத்திலோ, தொழிலாளர் மத்தியிலோ, குடும்பத்திலோ, அல்லது சமுதாயத்திலோ சந்திக்க வேண்டியிருந்தாலும் அவைகளுடைய எதிர்ப்புக்கு எதிராகவும், அவைகளின் மத்தியிலும் நமக்கு உதவி செய்கிறதை பிதா மறுபடி மறுபடி மெய்ப்பித்துக்காட்டியிருக்கிறார். சில வேளைகளில், அவருடைய உதவி மிகவும் தாமதமாகக் கிடைக்கிறதாகத் தோன்றும். இருந்தாலும், இந்த மூலவாக்கியத்திலுள்ள உறுதிமொழிக்கு இணக்கமாக தகுந்த சமயத்தில் இந்த உதவி எப்பொழுதும் வந்திருக்கிறது. நமக்கு "விரோதமாக பாவிகளால் செய்யப்படுகிற இவ்விதமான விபரீதங்களின்" மத்தியில், நம்முடைய ஜீவியத்தில் நமக்கு அளிக்கப்படுகிற தேவனுடைய பராமரிப்புகளின் ஆதரவினால் இந்த உறுதிமொழி நம்மை தைரியமுள்ளவர்களாய் இருக்கத் தூண்டுகிறது. **- P "30, 184.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங் 3.27, 28.1, நீதி 29.25, சங் 56.1-11, 118.5-16, ஏசா 8.12, 51.12.13, தானி 3.17.18, மத் 8.26, 10.28, ரோம 8.15, 33-39, 2தீமோ 1.7, 1பேது 3.13.14, 1யோவா 4.4, 16-18.**

**கோபுர வாசிப்பு : Z 14, 88 (5424).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் தேவன் எனக்கு எவ்வாறு உதவி செய்தார்? மனிதர் என்னைப் பயப்படுத்த வகைதேடினார்களா? எப்படி? மனிதருக்குப் பயப்படும் என்னுடைய பயத்தை தேவனுடைய உதவி எவ்வாறு பாதுகாத்தது?**